### 7. அரசினர் தனித் தீர்மானங்கள்—தொடர்ச்சி

**(இ) தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழ், (ஓய்வூதியம் பெறத்தக்க) நகராட்சிப் பணிகள் குறித்த பணி நிபந்தனைகள் முதலியவற்றை முறைப்படுத்துவதற்கான வரைவு விதிகள்.**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 305-எ, பிரிவிற்கிணங்க. தமிழ்நாட்டி லுள்ள நகராட்சிப் பணிகள் (ஓய்வூதியம் பெறத்தக்க), குறித்து வகைப்பாடு, வேலைக்கு ஆள் சேர்த்தல், பணி நிபந்தனைகள், ஒழுங்குமுறை, மேல் முறையீடு, ஓய்வூதியம் ஆகியவற்றை முறைப் படுத்துவதற்குக் கீழ்க்கண்ட வரைவு விதிகளுக்கு ஏற்பளிக்க இந்த அவை தீர்மானித்துள்ளது.

1. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகராட்சிப் பணி விதிகள் :

பாகம் 1—தொடக்கம்.

பாகம் 2—பொது விதிகள்.

பாகம் 3—பிரிவு 1. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொதுப்பணி விதிகள்.

பிரிவு 2. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகராட்சிப் பொறியியல்—நீர்ப்பணிகள் பணிவிதிகள்.

பிரிவு 3. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகராட்சி நகர அமைப்புத் திட்டப் பணிவிதிகள்.

பிரிவு 4. கிளை I தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகராட்சிப் பொதுச் சுகாதார ஒழுங்கு முறை விதிகள்.

கிளை II தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகராட்சி மருத்துவப் பணிவிதிகள்.

பிரிவு 5. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகராட்சிக் கல்விப் பணிவிதிகள்.

2. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகராட்சிப் பணி (ஒழுங்கு முறை-மேல் முறையீடு) விதிகள்.

3. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகராட்சிப் பணிகள் ஓய்வூதிய விதிகள்.

பேரவை உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கடந்த பதினைந்து நாட்களுக்கு முன்பு போர் மேகங்கள் சூழ்ந்திருந்த நேரத்தில் நாம் இந்தச் சட்டப் பேரவையில் கூடினோம். இன்றைய தினம் போர் மேகங்கள் கலைந்து, இந்தியா வெற்றிக் களிப்பில் திகழ்ந்திருக்கிற நேரத்தில் சட்டப்பேரவை மனநிறைவோடு கலைகிறது. பேரவை காலவரையறையின்றி, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒற்றிவைக்கப்படுகிறது.

பின்னர், மீண்டும் பேரவை கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒற்றிவைக்கப்பட்டது. பிற்பக 1-40

## 9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. STATUTORY RULES AND ORDERS

Nil.

### B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

78. Return of Assets submitted to the House by the Hon. Chief Minister, Hon. Minister for Education and Local Administration, Hon. Minister for Industries, Hon. Minister for Co-operation, Hon. Minister for Transport and Members of Legislative Assembly (*vide* names below) :—

*As on* 31—3—1971 :

1. Hon. Dr. M. Karunanidhi, Chief Minister.
2. Hon. Thiru V. R. Nedunchezhiyan, Minister for Education and Local Administration.
3. Hon. Thiru S. Madhavan, Minister for Industries.
4. Hon. Thiru Si. Pa. Aditanar, Minister for Co-operation.
5. Hon Thiru S. Ramachandran, Minister for Transport.

MEMBERS.

1. Thiru A. Arumugam.
2. Thiru C. Arumugam.
3. Thiru K. Rajamanickam.
4. Thiru J. S. Raju.
5. Thiru P. Ettiappan.
6. Thiru T. Ganapathy.
7. Thiru K. P. Kandasamy.
8. Thiru M. Kandasamy.
9. Thiru S. Kandappan.
10. Thiru M. V. Karivengadam.
11. Thiru J. Karunainathan.
12. Thiru N. V. Gurusami.